ஔம்

# விநாயகர்அகவல்

ஔவைஅருளியது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | 01 | சீ தக் | கள பச் | செந் தா | மரை பூம் |
| | | 02 | பா தச் | சிலம் பும் | பல யிசைப் | பா ட |
| | 02 | 03 | பொன் னரை | ஞா னும் | பூந் துகி | லா டையும் |
| | | 04 | வன் ன | மருங் கில் | வளர்ந் தழ | கெறிப் பப் |
| 02 | 03 | 05 | பே ழை | வயி றும் | பெரும் பா ரக் | கோ டும் |
| | | 06 | வே ழ | முக மும் | விளங் குசெந் | தூ ரமும் |
| | 04 | 07 | அஞ் சு | கர மும் | அங் குச | பா சமும் |
| | | 08 | நெஞ் சிற் | குடி கொண் ட | நீ ல | மே னியும் |
| 03 | 05 | 09 | நான் ற | வாயும் | நா லிரு | புய மும் |
| | | 10 | மூன் று | கண் ணும் | மும் மதச் | சுவ டும் |
| | 06 | 11 | இரண் டு | செவி யும் | இலங் குபொன் | முடி யும் |
| | | 12 | திரண் டமுப் | புரி னூல் | திக ழொளி | மார் பும் |
| 04 | 07 | 13 | சொற் பதங் | கடந் த | துரி யமெய் | ஞான |
| | | 14 | அற் புதம் | ஈன் ற | கற் பக | களி றே |
| | 08 | 15 | முப் பழம் | நுக ரும் | மூ ஷிக | வா கன |
| | | 16 | இப் பொழு | தென் னை | ஆட் கொள் ள | வேண் டி |
| 05 | 09 | 17 | தா யாய் | யெனக் குத் | தா னெழுந் | தரு ளி |
| | | 18 | மா யாப் | பிற வி | மயக் க | மறுத் தே |
| | 10 | 19 | திருந் திய | முத லைந் | தெழுத் துந் | தெளி வாய்ப் |
| | | 20 | பொருந் தியே | வந் தென் | உளந் தனிற் | புகுந் துக் |
| 06 | 11 | 21 | குரு வடி | வா கிக் | குவ லயந் | தன் னில் |
| | | 22 | திரு வடி | வைத் துத் | திற மிது | பொரு ளென |
| | 12 | 23 | வா டா | வகை தான் | மகிழ்ந் தெனக் | கரு ளி |
| | | 24 | கோ டா | யுதத் தாற் | கொடு வினைக் | களைந் தே |

•

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07 | 13 | 25 | உவட் டா | உப தே சம் | புகட் டியென் | செவி யில் |
| | | 26 | தெவிட் டா த | ஞா னத் | தெளி வையுங் | காட் டி |
| | 14 | 27 | ஐம் புலன் | தன் னை | அடக் கும் | உபா யம் |
| | | 28 | இம் புறு | கரு னையும் | இனி தெனக் | கரு ளி |
| 08 | 15 | 29 | கரு விக | ளொடுக் குங் | கருத் தினை | யறி வித் து |
| | | 30 | இரு வினை | தன் னை | அறுத் திருள் | கடிந் தே |
| | 16 | 31 | தல மொ ரு | நான் கும் | தந் தெனக் | கரு ளி |
| | | 32 | மல மொரு | மூன் றின் | மயக் க | மறுத் தே |
| 09 | 17 | 33 | ஒம் பது | வா யில் | ஒரு மந் | திரத் தால் |
| | | 34 | ஐம் புலக் | கத வை | அடைப் பதுங் | காட் டி |
| | 18 | 35 | ஆ றா | தா ரத் து | அங் குச | நிலை யும் |
| | | 36 | பே றா | நிறுத் திப் | பேச் சுரை | யருத் தே |
| 10 | 19 | 37 | இடைப் பிங் | கலை யின் | எழுத் தறி | வித் துக் |
| | | 38 | கடை யிற் | சுழு முனைக் | கபா லமுங் | காட் டி |
| | 20 | 39 | மூன் றுமண் | டலத் தின் | முட் டிய | தூ ணின் |
| | | 40 | நான் றெழு | பாம் பின் | நா வி | லுணர்த் தி |
| 11 | 21 | 41 | குண் டலி | யத னிற் | கூ டிய | அச பை |
| | | 42 | விண் டெழ | மந் திரம் | வெளி பட | வுரைத் து |
| | 22 | 43 | மூ லா | தா ரத் தில் | மூண் டெழுங் | கன லை |
| | | 44 | கா லா | லெழுப் புங் | கருத் தறி | வித் தே |
| 12 | 23 | 45 | அமு த | னிலை யும் | ஆ தித் த | னியக் கமும் |
| | | 46 | குமு த | சகா யன் | குணத் தையுங் | கூ றி |
| | 24 | 47 | இடைச் சக் | கரத் தின் | ஈ ரெட்டு | நிலை யும் |
| | | 48 | உடற் சக் | கரத் தின் | உறுப் பையுங் | காட் டி |
| 13 | 25 | 49 | சண் முக | தூ லமும் | சதுர் முக | சூட் சமும் |
| | | 50 | எண் முக | மா க | இனி தெனக் | கரு ளி |
| | 26 | 51 | புரி யட் ட | கா யம் | புலப் பட | எனக் குத் |
| | | 52 | தெரி யெட் டு | நிலை யும் | தெரி சனப் | படுத் தி |
| 14 | 27 | 53 | கருத் தினிற் | கபா ல | வா யிற் | காட் டி |
| | | 54 | இருத் தீ | முத் தீ | இனி தெனக் | கரு ளி |
| | 28 | 55 | என் னை | யறி வித் து | எனக் கருள் | செய் தே |
| | | 56 | முன் னை | வினை யின் | முத லைக் | கலைந் தே |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | 29 | 57 | வாக் கும் | மன மும் | இல் லா | மனோ லயம் |
| | | 58 | தேக் கியே | எந் தன் | சிந் தைத் | தெளி வித்து |
| | 30 | 59 | இருள் வெளி | இரண் டிற் | கொன் றிட | மென் ன |
| | | 60 | அருள் தரும் | ஆ னந் தத் | தழுத் தியென் | செவி யில் |
| 16 | 31 | 61 | எல் லை | இல் லா | ஆ னந் த | மளித் து |
| | | 62 | அல் லல் | களைந் தே | அருள் வழி | காட் டிச் |
| | 32 | 63 | சத் தத் | தினுள் ளே | சதா சிவம் | காட் டிச் |
| | | 64 | சித் தத் | தினுள் ளே | சிவ லிங் கம் | காட் டி |
| 17 | 33 | 65 | அணு விற் | கணு வாய் | அப் பா லுக் | கப் பா லாய்க் |
| | | 66 | கணு முற் றி | நின் ற | கரும் புள் ளே | காட் டி |
| | 34 | 67 | வே டமும் | நீ றும் | விளங் க | நிறுத் திக் |
| | | 68 | கூ டுமெய்த் | தொண் டர் | குழாத் துடன் | கூட் டி |
| 18 | 35 | 69 | அஞ் சுக் | கரத் தின் | அரும் பொருள் | தன் னை |
| | | 70 | நெஞ் சக் | கருத் தின் | நிலை யறி | வித் துத் |
| | 36 | 71 | தத் துவ | நிலை யைத் | தந் தெனை | யாண் ட |
| | | 72 | வித் தக | விநா யக | விரை கழல் | சர ணே |

முற்றும்

---

## நூல் குறிப்பு:

விநாயகர் என்னும் இந்துக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட நூல். இது ஆசிரியப்பாவில் **நிலைமண்டில ஆசிரியப்பா** என்னும் வகையைச் சேர்ந்தது. ஆசிரியப்பாவை **அகவற்பா** என்றும் வழங்குவர். எனவே இது **விநாயகர் அகவல்** என்று பெயர் பெற்றது.

---

## எமது தமிழாய்வு:

இப்பாடல் மொத்தம் 72 அடிகளைக் கொண்டது அவற்றை இரண்டிரண்டு அடிகளாக பிரிக்க, மொத்தம் 36 கண்ணிகள். அவற்றையும் இரண்டிரண்டு கண்ணிகளாக பிரிக்க, மொத்தம் 18 அகவல்கள். ஆக ஒரு அகவலில் 2 கண்ணிகள் 4 அடிகள் உள்ளது. முதல் கண்ணியை உச்சஸ்வரத்திலும் அடுத்த கண்ணியை நீச்சஸ்வரத்திலும் அகவ வேண்டும். மயில் ஒருமுறை அகவுவதைப் போல. அதுமட்டுமல்ல ஒரு கண்ணியிலுள்ள முதல் அடியை உச்ச்ஸ்வர்த்திலும் அடுத்த அடியை நீச்சஸ்வரத்திலும் அகவ வேண்டும். அதேபோல் ஒரு அடியில் உள்ள சீர்களையும் அவ்வாறே அசைபிரித்து அகவவேண்டும்.

மனனம் செய்வதற்கு எற்றவகையில் எதுகை மோனை இயைபுத் தொடைகளை வண்ணங்களில் காட்டியிருக்கிறோம். மேலும் அகவல், கண்ணி மற்றும் அடி போன்றவற்றை எண்ணிக்கைகளில் காட்டியிருக்கின்றோம். இன்றையகாலங்களில் செய்யுள்களை சொல்தனிநிலை செய்து பதிப்பிக்கிறார்கள், இது தவறான முறையாகும்.

செய்யுள்களை வகையுளி செய்யப்பட்ட விதத்திலேயே காண்பிக்க வேண்டும். அதனால் இங்கே அடிக்கு நான்குசீர் என்ற அடிப்படையிலேயே காட்டியிருக்கிறோம். சீரை அசைபிரித்தும் காட்டியிருக்கிறோம். யாப்பிலக்கணம் தெரிந்தவர்கள் இந்த நுட்பங்களைக் கண்டு மகிழ்வர்.

---

## ஆசிரியர்குறிப்பு:



ஔவையார் என்பவர் சங்ககாலத்தைச் சேர்ந்த ஒரு பெண்பாற் புலவர் ஆவார். அவர் குழந்தைப்பருவம் முதலே, விநாயகர்மீதும், தமிழின்மீதும், மாளாத பற்றுகொண்டவராக இருந்தார். அவர் தனது இளமைப்பருவத்தை எய்தியவுடன், அவருக்கு திருமணம் முடித்துவைக்க பெற்றோர் ஏற்பாடு செய்தனர். இல்லற வாழ்வில் நாட்டம் இல்லாத ஔவை. துறவரவாழ்க்கையை மேற்கொண்டால்தான் தமிழ்த்தொண்டாற்றி இறைவனை அடையமுடியும் என்றெண்ணி தன்விருப்பத்தை பெற்றொரிடம் தெரிவித்தார். ஆனால் அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை, இதனால் மனமுடைந்த ஔவை தன்வீட்டுக் கொல்லையில் உள்ள விநாயகர் திருவுருவச்சிலையை சரணடைந்தார். பிறகு விநாயகர், அவரை ஆட்கொண்டு, அவருக்கு துறவு கோலத்துடன் கூடிய முதுமைத்தோற்றத்தை அளித்து, தமிழில் நூல் பலபடைத்து அதன்வழி அறவாழ்வையும் வீடுபேரு அடையும் மெய்யறிவு கலையையும் மக்களுக்கு எடுத்துரைத்து. தமிழுக்கும் இறைவனுக்கும் தொண்டாற்றி பிறகு சிவபதவியடைய தவம் மேற்கொள்ளுமாறும் அறிவுருத்தினார். அவ்வழிக்குதாமே வந்து அழைத்துச்செல்வோம் என்றும் கூறி மறைந்தார். அதன்படிக்கு விநாயகரை முதன்மைக் கடவுளாக வைத்து நூல் பலபடைத்தார். அவற்றில் ``விநாயகர்அகவல்'' என்ற இந்த நூலும் அடக்கம்.

---

நெறியோடு ஆய்வு செய்து வெளியிடுவோர்

**இரா. மகேந்திரவர்மன்**
தமிழாராய்ச்சியாளர்

+91 9677253304
rmagendravarman@gmail.com

www.muththamizhneri.com
(முத்தமிழ்நெறி.காம்)
-Powered by **Lifo Technologies**

- இணையவழி ஆய்வுக்கூடம்
- இணையவழி வெளியீட்டகம்
- இணையவழி ஊடகம்
- இணையவழி பயிலகம்
- இணையவழி சங்கம்